**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்**
**ஆத்தூர்**
**------**
**அசல் வழக்கு எண்.32/2024**

**2026 ஆம்** வருடம் மார்ச் மாதம் 16 ஆம் நாள் வாதி தரப்பு சாட்சியான வா.சா.1-இன் வாக்குமூலம் 1873ம் வருடத்திய 10வது விதியின் படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தனபாலன் | ஜாதி | : | |
| த.பெ | : | கந்தசாமி | தொழில் | : | விவசாயம் |
| கிராமம் | : | பஞ்சம்பட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 58/2026 |
| தேதி | : | 16.03.2026 | | | |

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் வாதி ஆவேன். நான் ஏற்கனவே எனது தரப்பு நிரூபண வாக்குமூலத்தை வாதி தரப்பு சாட்சியமாக தாக்கல் செய்துள்ளேன். பின்வரும் ஆவணங்களை வாதி தரப்பு சான்றாவணமாக குறியீடு செய்யுமாறு வேண்டுகிறேன்.

1. 15.12.2004 தேதியிட்ட வாதி பெயரில் உள்ள கிரைய ஆவணம் கணினி வழி சான்றிட்ட நகல் **(வா.சா.ஆ.1/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
2. வாதி பெயரில் உள்ள பட்டா கணினி நகல் **(வா.சா.ஆ.2/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
3. 03.09.2024 தேதியிட்ட 3ம் பிரதிவாதியின் குறிப்பாணை அசல் **(வா.சா.ஆ.3/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
4. போட்டோ அசல் **(வா.சா.ஆ.4/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
5. புலப்படம் கணினி நகல் **(வா.சா.ஆ.5/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர், பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை குறுக்கு விசாரணை செய்வதற்காக இவ்வழக்கு வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor